உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௪. | 1916-ம் ஆ அக்டோபர் மீ | இதழ் ௧0.

இலௌகிகப் பகுதி.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டம்.

சென்ற 1916-ம் ஞு அக்டோபர் மீ 22-ம் உ ஞாயிற்றுக்கிழமை தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் அறிஞர் பலர் கூடிய ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பண்டிதர் சவரிராயன் எம். ஆர். ஏ. எஸ். அவர்கள் அக்கிராசன மமர, அப்பொழுது நடுத்தரப் பரீட்சைக்குத் தமிழ் வியாசம் எழுது முறையின் பேச்சு வழக்குச் சொற்களைக் கலந் தெழுதும் ஓர் அளவினைத் தீர்மானிப்பதற்கென்று சென்னைச் சர்வ கலா சங்கத்தாரின் ஆலோசனைச் சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட காரிய ஆலோசனைச் சபையாரின் தீர்மானங்கள் ஆராயப்பட்டன. இவ் வாராய்ச்சியும் இத்தமிழ்ச் சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் த. வே. உமாமகேசுவரம்பிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்களால் தொடங்கப்பட்டு ஐந்து மணி நேரத்திற்கு மேலாக நடைபெற்றது. சர்வ கலா சங்கத்தின் பதிவு அதிகாரியால் கலாசாலைகளுக்கு விடுக்கப்பட்ட சுற்றுக் கடிதத்திலடங்கிய பல ஆதாரவுகளும் ஆழ்ந்து ஆராயப்பட்டுப் பின்கண்ட தீர்மானங்கள் எல்லோராலும் ஒருமையாய் ஒப்புக்கொள்ளப்பட்டன.

180

1. தமிழ் வியாசமெழுதுமுறையில் பேச்சு வழக்கச் சொற்களின் அளவைத் தீர்மானிக்க ஏற்பட்ட காரிய ஆலோசனைச் சபையானது, போதுமான பிரதிநிதிகளுடன் கூடியதல்லாததுபற்றியும், யாதொரு தீர்மானமும் கொள்வதற்கு முன், கலாசாலைப் பண்டிதர்களும், தமிழ்ச் சங்கங்களும், பிரசித்திபெற்ற தமிழறிஞர்களும், ஆசிரியர்களும் கலந்து ஆலோசிக்கப்படாததுபற்றியும் இக் கூட்டமானது மிகவும் விசனிக்கின்றது.

2. தமிழ் வியாச மெழுதுவதற்கு, பேச்சுத் தமிழில் ஓர் அளவு ஏற்படுத்திக்கொள்ளலாமெனக் கருதியமாத்திரத்தில், சர்வ கலாசங்கத்தின் ஆலோசனைச் சபையார் தொடக்கத்திலேயே பிசகிவிட்டனரென்றும், இதுவரையிலும் கொண்டுவந்த ஓர் எழுத்து நடையை விட்டுப் புதியதோர் மார்க்கம் புகுந்தது, தமிழ் மொழியில் உயர்தரமான செவ்விய நடையைக் கற்றறிந்துகொள்வதற்கு அழிவைத் தேடித் தருகிறதென்றும் இக் கூட்டம் கருதுகின்றது.

3. மேலே கூறப்பட்ட ஆலோசனைச் சபையாரின் இரண்டாவது தீர்மானத்தை இந்தக் கூட்டம் சிறிதும் ஒப்புக்கொள்ளாததுடன், இப்பொழுதுள்ள தமிழ் நெடுங்கணக்கு ஒருவிதத்திலும் பின்னப்படுத்தக் கூடாதென்றும், பிறமொழிகளிலிருந்து ஏற்றுக்கொள்ளப்படும் வார்த்தைகள் தமிழ் மொழியின் ஒலி இலக்கணத்திற்குப் பொருந்தியனவாகத் தோன்றும்படியே செய்யப்படவேண்டுமென்றும், பிறபாஷை எழுத்துக்களின் உச்சாரணத்தை ஏற்று நிற்க, புதிய எழுத்துக்களைக் கற்பித்துக் கொள்ளச் செய்யு முயற்சியானது தமிழ் மொழியின் விசேட நிலையைக் கெடுத்து அதன் இலக்கணத்தின் தோரணை யழகையும் சின்னபின்னமாக்குமென்றும் தீர்மானிக்கின்றது.

4. இலக்கணத்தாலும் வழக்காலும் ஒப்புக்கொள்ளப்படாத காரணத்தால் மொழிகள் புணரும்போது சந்தி விதிகளைக் கவனித்தாலும் கவனிக்காவிடிலும் பாதகமில்லையென நெகிழவிடுவதை இந்தக் கூட்டமானது உறுதியாக மறுத்து நிற்கின்றது.

5. காரிய ஆலோசனைச் சபையாரின் அறிக்கையின் இரண்டாவது அநுபந்தத்தில் உதாரணமாகக் காட்டப்பட்ட "மரத்தை கண்டான்" என்பதுபோன்றவற்றில் சந்தி விதியை இஷ்டப்படி தழுவிக் கொள்வது இயற்கை விரோதமானதென்றும், "மரத்தைக் கண்டான்" எனக் ககரவொற்று இரட்டித்தலே வேண்டுகின்ற சாதாரணச் செவியின்ப

உச்சரிப் பிலக்கணத்திற்கு மாறுக உள்ளதென்றும் இந்தக் கூட்டமானது அபிப்பிராயப்படுகிறது.

6. இரண்டாவது அனுபந்தத்தில் மூன்றாவது விடயமாக விலக்கப்பட்ட உதாரணங்களும் அவை கொடுக்கப்பட்ட உத்தேசமும் தெளிவில்லனவாயும் அறியக்கூடாதனவாயு மிருக்கின்றன.

இத் தீர்மானங்கள் சர்வ கலாசங்கத்தின் பதிவு அதிகாரியருக்குத் தெரிவித்துக்கொள்ளப்பட்டன.

ஆ. ச. ஆறுமுகம்பிள்ளை,
உதவிக் காரியதரிசி,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

பதினெண் கீழ்க்கணக்கு.

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி — மாமூல
மின்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

தமிழர்களது வழக்க வொழுக்கங்களைக் கூறும் நூல்கள் இருவகைப்படும். ஒன்று, ஐந்திணையாகிய களவு கற்பு என்கின்ற அகப்பொருளும், வெட்சி வஞ்சி உழிஞை தும்பையாகிய வற்போரும் உயர்த்தலாகிய வாகையும் நிலையின்மையாகிய காஞ்சியும் சிறப்பித்துப் பாடுதல் கடவுள் வாழ்த்து முதலிய பகுதியவாய பாடாணும் பொருந்திய புறப்பொருளும், இன்னும் இசைநாடகப் பகுதிகளைக் கூறும் பெருநூல்களுமாம். மற்றொன்று, அறிவர் அந்தணர் அரசர் முதலியோருக்கியன்ற மற்றைய வறங்களை மெல்லென்ற தன்மையாற்கூறும் அறநூல்களென்க.

அவ் வறநூல்கள் தலைச்சங்கத்தும் இடைச்சங்கத்தும் இன்ன பெயருடன் விளங்கின என்பது தெரியவில்லை. அதற்கு இப்போது யாதொரு மேற்கோளும் கிடைத்திலது. ஆயினும் அக்காலத்துத் தமிழால் அமைந்த அறநூல்கள் பல விருந்தனவென்பது பழைய சங்கநூல்களால் நமக்குத் தெரிகின்றது. கபாடபுரம் கடல்கொண் டழிந்ததும் அவைகள் பெயரும் கிடைக்காதொழிந் திறந்தனபோலும்.

கடைச்சங்கத்தார் காலத்துத் தோன்றிய புலவர்கள் அவ்வொழுக்க வறங்களைத் திரட்டி ஒவ்வோர் நூல்கள் இயற்றினர். அதுவே தமிழர்கட்கு உரிய அரிய அறநூல்களாய்ப் பிற்காலத்துப் பயன்பட்டு உதவுகின்றன. அவ் வறநூல்களைத்தான் அம்மை என்று தொல்காப்பியம் கூறும். அவை சில நூற்றாண்டுகளாக வழங்கிவந்தும் அவற்றின் அருமை தெரியாமல் சிலர் அவற்றை நீதிநூல்களென்று ஒதுக்குவாராயினர். அவைகளை நுனித்து ஆராயப் புகுந்தவிடத்து, ஆரியர்களது மனு முதலிய நூல்களிற் கூறும் தருமம் போலாது, மக்கட்குப் பொதுநிலையாகவிருந்து அறநிலைகளைக் கூறுவன என்பது தெற்றெனத் தெரிகின்றது. தமிழர்கட்கு வேள்வி முதலிய சிறப்பின்மையானும் அவை இடைச்சங்கக் காலத்தே பயின்றமையாலும் அவை முதலிய ஆரிய வாசாரங்களை யொழித்துத் தமிழர்க்குரிய வொழுக்கங்களைக் கூறுநிற்கும் என்க. நிற்க.

இருபத்தைந்தாண்டுகட்கு முன்னர், தமிழறநூல்கள் இன்னின்னவென்று தோற்றாது பல்லறிஞர்கள் இடர்ப்படுவாராயினர். மேலே காட்டிய "நாலடி நான்மணி" என்கிற வெண்பாவே அவ் வறநூல்களின் பெயர்களைக் குறிப்பிக்கும். அவைகளை மேடி வெண்பாவும், பன்னிரு பாட்டியலும் கீழ்க்கணக்கு என்று கூறும். அந்நூல்கள் பெயர்வருமாறு: (௧) நாலடி, (௨) நான்மணிக்கடிகை, (௩) இனியவை நாற்பது, (௪) இன்னா நாற்பது, (௫) குண நாற்பது, (௬) கார் நாற்பது, (௭) ஐந்திணை ஐம்பது, (௮) ஐந்திணை எழுபது, (௯) திணைமொழி ஐம்பது, (௧௦) திணைமாலை நூற்றைம்பது, (௧௧) திருக்குறள், (௧௨) திரிகடுகம், (௧௩) ஆசாரக்கோவை, (௧௪) பழமொழி, (௧௫) சிறுபஞ்சமூலம், (௧௬) முதுமொழிக்காஞ்சி, (௧௭) ஏலாதி, (௧௮) கைந்நிலை எனப் பதினெட்டு நூல்களாம். இந் நூல்களுள் நானுற்பதில் குணநாற்பதை நீக்கிக் களவழி நாற்பதைக் கூறுவாருமுளர். அஃது பொருந்தாது. ஏனெனில், களவழி கோச்செங்கணான் மீது தமது சேரனைக் காவலினின்று மீட்கப்பாடிய பாடாண் பகுதியவாகலான் அறநூல்களோடு கோத்தல் கூடாதென்க. மேற்கூறிய வறநூல்கள் பதினெட்டுள்ளும் ஐந்திணைகளைப் பகுத்து, ஐந்திணை ௫௦, ௭௦, திணைமொழி ௫௦, திணைமாலை ௧௫௦, கைந்நிலை முதலிய வைந்து நூல்களும் அத்திணைகளுள் ஒவ்வொன்றைக் கார்நாற்பதும் குணநாற்பதும் பிரித்தும் கூறுநிற்கும் என்க. இப் பதினெண்ணறநூல்களும் ஆரியர்களது பதினெண் டரும நூலுக்கு ஒப்பாய் மேற்கூறிய வறநூல்களினும் மிக்க சிறப்புடையதாய் விளங்குகின்றன. அவற்றுள் மனுதன்மநூலே போன்று பெரும் பாகங்களைக்கொண்டு தமிழர்க்குரிய அறமே, பொருளே, இன்பமே என்ற மும்முதற் பொருள்களையும் பகுதி பகுதியாகக்

கூறும் உண்மையவாய் உலகுள் எல்லார்க்கும் பொருந்தும் ஒழுக்க நூலாகிய மெய்யநூல், நம்மக்கள் என்ஞான்றும் படித்து உய்வதற்குரிய தெய்வதப் புலவராம் திருவள்ளுவனாரால் செய்தருளிய திருக்குறள் என்னும் அமிழ்தினுமினிய தமிழ்ச்சுவை கமழும் அருமந்தநூல் ஒன்றே யாம்.

(இன்னும் வரும்)

திரு. சுப்பிரமணிய தேசிகர்,
சிலாசாசன பரிசோதகர், காஞ்சீபுரம்.

தருணீமணி.

8. கண்ணியிற்பட்ட மான்.

(வெண்டாமரை ச, இதழ் அ — கூ, 177-ம் பக்கத் தொடர்ச்சி.)

"அம்மா! நான் சிறைச்சாலை ஊழியன். சோமதத்தர் உங்களைப் பார்க்க வெகு ஆவலாக இருக்கிறார். நாளை உங்களை அவ்விடம் வந்து பார்த்துப் போம்படி வேண்டினார். சோமதத்தரின் சகோதரி என்றால் உங்களை உள்ளே விடுவார்கள்" என்று சிறுவன் சாற்றி யகன்றனன்.

மாதவியும் தனக்குள் சிந்தனையிட்டாள். ஒருவேளை, தன்னிட மிருக்கும் சொத்தை நம் வசமளிக்க நினைந்து நம்மைக் கூப்பிட்டனுப் பினனோ என யோசித்தாள். அவசியம் போவதாகத் தீர்மானித்தாள்.

மறுநாட் பொழுது விடிந்தது. மாதவி சிறைச்சாலையை யணுகி, "நான் சிறையிலிருக்கும் சோமதத்தர் சகோதரி, அவரைப் பார்த்துப் போகவேண்டும்" என்றனள். உடனே அவளுக்கு உள்ளே செல்ல வழிவிடப்பட்டது. ஒரு சிறுவன் அவளைச் சோமதத்தன் அருகில் கொண்டுவிட்டு அகன்றான். இருவரும் ஒருவரை யொருவர் நோக்கினர். சின்னேரம் நிச்சப்தம். கடைசியாக, "மாதவீ! நீ இங்கு வந்ததில் சந் தோஷம். எனக்குப்பின் என் பொருளை யார் அனுபவிக்கிறது என்ற ஏக்கம் என்னைப் பாதிக்கிறது. உன் வசம் அளிப்பதாக முடிவு செய் தேன். அதை யடைய நீ ஒரு உதவி எனக்குப் புரியவேண்டும் —"

மாதவி கண்ணீர் பெருக்கினள்.

"சோமா! உன்னை விட்டு — பணமா பெரிது! —" தேம்பி யழலானாள்.

சோமதத்தன் அவளைத் தேற்றி "எல்லாம் விதிவசம்! என்னை எப்படியேனும் கழுவிலேறும் அவமானத்தினின்றும் தப்புவி! எனக்கு விஷம் வேண்டும் — வைத்தியன் கொடுக்கமாட்டான் — மருத்துவச்சி குப்பாயி யிடம் கிடைக்கும் —"

"நாளைக் காலையில்! —"

இருவரும் பிரிந்தனர்.

... ...

மறுநாள் பொழுது விடிந்தது. சோமதத்தன் எழுந்திருந்து தனக்குள் பின்வருமாறு சிந்திக்கலுற்றான்.

"மடையன்! என்னசெய்தேன் நான்! நான் பிறந்த குலமும், என் பெயரும், என் அளவிறந்த நிதியமும் என்னுயின? சங்கரா! என்னைப் பொறுத்தருள்க! உன்னையன்றி யோரணுவு மசையாதிருக்க என்னையேன் இப்பாதகம்புரியத் தூண்டினாய்? நான் உன்னை மனப் பூர்வமாக உபாசிக்கவில்லையா? — ஏ! மூடா! நான் வேதஸ்வரூபமாக நின்று துர்க்கருமங்கள் செய்யாதே என்று சொல்லவில்லையா? பின் ஏன் அதைக் கடந்தாய்?—

ஆ! — தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வரும்
காம மில்லை யெனிற்கொடுங் கேடெனு
நாம மில்லை நரகமு மில்லையே!

அவளல்லவோ என்னை இக் கோலங்கண்டது! அவளும் என்னைப் போல் பாதைப்பட்டிறக்கக்கடவள்! என்னைப் பின்தொடர்ந்து வந்து என் ஊழ்வினையை எனக்கு ஊட்டிவைத்த தருமதேவதை அவளையும் சும்மாவிடாது! — ஏ பத்மி! உன் அன்பினை இப்பொழுதல்லவோ அறிந்தேன்! உனக்குத் துரோகி ஆனேனே! — என்னே மடமை! யாவர் கண்ணிலும் புலப்படாமல் நான் ஒரு காரியத்தைச் சாமர்த்தியமாய் முடித்துவிட்டதாகக் கருதினேன். எங்கும் வியாபித்து நிற்கும் பரம் பொருளின் பெருமையை மறந்தேன் — மாதவி வருவளா? ஏன் வரமாட்டாள்! என் பொருள்மீது நாட்டம் அவளுக்கில்லையா! —"

இதற்குள் சிறைச்சாலையின் வாயிற் கதவு திறக்கும் சப்தம் காதிற் பட்டது. மாதவி சோமன் முன் தோன்றினள்.

"இதோ விஷம்! —"

"இதோ என் மரணசாசனம். இதை இன்று சாயந்தரம் நீ பிரித்துப் பார்க்கலாம். நான் இன்று சாயந்தரம் விஷத்தைச் சாப்பிடுகிறேன் —"

... ...

சாயந்தரம். சோமதத்தன் சில கடிதங்கள் எழுதி முடித்தான். "நானிறந்ததும் அவளும் இறக்கவேண்டும்! அவளுடைய கர்மத்தின் பலன் அவளுக்குத் தெரியும்!" என்றான்.

பின்னர் அவன் முகத்தில் மந்தகாசம் திகழ்ந்தது. மனக்கவலையற்று ஈசனைத் துதித்தான். சந்தியா காலத்தில் ஈசுவரன் கோயில் கண்டாமணி கணகணவென்று சப்தித்தது. சிறைச்சாலைப் பலகணியிலிருந்து சௌந்தரேசரின் சன்னதி நன்றாகத் தெரியும். ஈசுவரனை ஓர் முறை தரிசித்தான். மனமகிழ்ந்து சில பதிகங்களை யோதினான். தன் ஜீவனை உடலத்தினின்றும் துண்டிக்கும் கத்திரியாம் விஷக்குப்பியினைத் தன் கையிற் கொண்டான். "இதுதான் பத்மினியின் கொலைக்குப் பிராயச்சித்தம். அவள் பானகத்திற் கலந்த விஷத்தையே என் பானகமாகக் கொண்டேன் ஈசா! சத்தியமே நிலைக்கும்! சத்யமேவ ஜயதி! —" என்றான்.

சில நிமிஷங்களில் சோமதத்தன் சவம் கீழ் வீழ்ந்தது.

(வரும்.)

R. வாசுதேவ சர்மா.

ஓர் வேண்டுகோள்.

சோழமண்டல சதகம்:—இந்நூலாசிரியர் சோழநாட்டில் திருத்துறைப் பூண்டிக்கு வடக்கிலுள்ள வேளூரில் வசித்துவந்த காரணத்தால் வேளூர் ஆத்மநாத தேசிகரென்று சொல்லப்படுகின்றார். இவர் காலம் கி. பி. 1650 – 1728-க்கும் இடைப்பட்ட காலம். திருவாரூர் இலக்கண விளக்கப் பரம்பரை சோமசுந்தர தேசிகரால் (பாடப்பட்டோர் வரலாற்றுடன்) இச் சதகம் அச்சிடப்பட்டுள்ளது. விலை அணா எட்டு.

தமிழ்ப் பாஷையின் சரித்திர ஆராய்ச்சி வகையில் "தமிழ் நாவலர் சரித்திரம்" மூன்று சதகங்களும் முக்கியமாம். "தொண்ட

மண்டல சதகம்” வெகு நாட்களுக்கு முன்னே அச்சேறிவிட்டது. “சோழமண்டல சதகம்” இப்பொழுது வெளியாய்விட்டது. “பாண்டி மண்டல சதகம்” இன்னும் வெளியாகவில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் செந்தமிழ் வாயிலாக இச் சதகத்தை யிதுகாறும் வெளிப்படுத்தாமை ஆச்சரியமே. மாறனலங்காரம் முதலிய பெரு நூல்கள் வெளியாகியும் இச் சதகம் மட்டும் தலைகாட்டாதது வியப்பே. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராம் இராமநாதபுரம் மகாராஜா கனம்பொருந்திய ஸ்ரீ முத்து ராமலிங்க சேதுபதி யவர்கள் இச்சதகத்தையும் தமிழ் நாவலர் சரித்திரத்தையும் விரைவில் வெளிப்படுத்துவார்களாயின் தமிழ்ப் பாஷையின் சரித்திரம் சீக்கிரம் வெளியாகும்.

தி. வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப் பண்டிதர், புதுவை.

வைத்தியக் குறிப்பு.

மூல முளை :— இவ்வியாதியுடையவர்கள், நாள்தோறும் செவ்வலரிப் பூவைக் கொண்டுவந்து ஷை முளையின்மேல் கனதியாக வைத்துக் கௌபீனத்தை நெகிழாமற் கட்டிக்கொண்டுவரும் பக்ஷத்தில், அம் முளைகள் இற்று வீழ்ந்து சுகத்தைக் கொடுக்கும். இத்துடன் மிருதார் சிங்கியிலிருந் தெடுக்கப்பட்ட ஈயத்தைக்கொண்டு மோதிரஞ்செய்து இடதுகைச் சுண்டுவிரலில் மாட்டிக்கொண்டு மலமோசன காலங்களில் அபானத்தை அலம்பிவருவதினாலும், ஷை ஈயத்தினாற் செய்த பாத்திரங்களில் அன்னமாவது பான வஸ்துக்களாவது வைத்து உபயோகித்து வருவதினாலும் மிகுந்த அனுகூலமுண்டு.

மிருதார்சிங்கி ஈயம் :— போதுமானமட்டும் மிருதார்சிங்கியைப் பொடித்து அத்துடன் பொடிப்பொடியாக நறுக்கப்பட்ட தலைமயிரையும் கொஞ்சம் வெண்காரத் தூளையும் கலந்து சமபாகமாகச் சேர்த்துக் குகைக்குள் பொதிந்து சில்லிட்டுச் சீலைமண் வலுவாய்ச்செய்து காய்ந்த பின்னர், உலையில் வைத்து குகை அளிய ஊதியெடுத்து உடைத்துப் பார்க்க அதிலுள்ள ஈயம் மணிமணியாய் இருக்கும். அவைகளை யெடுத்துக் கழுவி இருப்புக் கரண்டியிற் போட்டு எண்ணெய்விட் டுருக்க ஒரே கட்டியாகும்.

வெண்குட்டம் :— இவ்வியாதியுடையவர்கள் நாள்தோறும் செவ்வலரிப் பூச் செடியிருக்கும் நந்தவனங்களுக்குச் சென்று ஷை பூச்செடி யிலை

களின் அடிக் காம்புகளை இணுங்கிப் பார்க்கப் பால்வரும். அந்தப் பாலை யெடுத்து வெள்ளை படர்ந்திருக்கிற ஒவ்வோரிடங்களிலும் பூசிக்கொண்டு வா, கூடிய சீக்கிரத்தில் வெள்ளைநிறம் மாறிச் சுகந்தரும்.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
பழனிஸ்தலம்.

இலக்கியப் பகுதி.

யசோதர காவியம்.

நான்காவது சருக்கம்.

(வெண்டாமரை ௪, இதழ் ௮ - ௯, 192-ம் பக்கத் தொடர்ச்சி.)

"இனி யசோமதியின் நடக்கையை நவில்கின்றேன் கேள்" என்று மாரிதத்த மன்னனை நோக்கி அபயருசி அறைகின்றான் :—

செந்தளிர் புனைந்த சோலைத் திருமணி வண்டுந் தேனுங்
கொந்துகள் குடைந்து கூவுங் குயிலொடு குழுமி யார்ப்பச்
சொந்துண ரளைந்து தென்றற் றிசைதிசை சென்று வீச
வந்துள மகிழ்ந்த தெங்கும் வளர்மதுப் பருவ மாதோ.

ஓர் நாள் யசோமதி யரசன், பூங்கொத்துகள் நிறைந்த ஓர் பொழிலின்கண்ணே, தனது மனைவியாகிய புட்பாவலியுடன் சென்று ஓர் அசோக மரத்தடியிலுள்ள கொடி வீட்டில் பூவணையின்மேற் பொருந்தி யிருந்தனன். அப்போழ்து அணிபலவணிந்த அழகிற்சிறந்த ஆடல் மகளிர் அங்கு ஆடினர் பாடினர். அரசன் அவ் வாடலைக் கண்டுகளித்து அவர்கள் பாடலி லமிர்த வூறல் பருகினன் மகிழ்ந்தி ருந்தான். மன்னன் இங்ஙனமிருப்ப, படைத்தலைவன் சண்டகருமன் என்பான் அப்பூங்காவில் கொடிய மனிதர்களும் கொடிய விலங்குகளும் அரசனிடம் வரவொட்டாமல் காவல்செய்துகொண்டிருந்தனன். அவன் அக்கானில் தனிமையாக ஓரிடத்து யோகுசெய்துகொண்டிருந்த அகம்பனர் என்னும் முனிவரைக் கண்ணுற்று, அவர் கண்விழித்துப் பார்க்குமளவும் அங்குக் காத்திருந்தனன். பின்னர் முனிவர் யோகு குலைந்து கண்விழித்துப் பார்த்ததும், அவரது மலரடி வணங்கி வாழ்த்தி வழுத்துகின்றான் :

"அடிகேள்! நீவிர் இத்தனியிடத்தே மனத்தைப் புறத்தே செலுத்தாதடக்கி, உடம்பும் அசைவின்றியிருந்து உளத்தே எதை நினைத்துக்கொண்டிருந்தீர்? அசனால் நீவிர் அடையும் பயன் யாது? அருளிச் செய்தல் வேண்டும்" என்று வேண்டினன். "இவன் அருள்பெறுதற் குரியன்" என நினைத்து அருள்நிறைந்த நெஞ்சோடு அம்முனிவர் சண்ட கருமனை நோக்கிச் சாற்றுகின்றார்:

கூர்த்த அறிவுடைய பெரியோர் தம் மனத்தாற் குறிக்கப்படும் பொருள், பேரறி வாகித் தம்மிற் பிறழ்விலா உயிரை யன்றே.

அனந்தமா மறிவு காட்சி யருவலி போக மாதி
நினைந்தவெண் குணங்க ளோடு நிருமல நித்த மாகிச்
சினஞ்செறு வாதி யின்றித் திரிவித வுலகத் துச்சி
யனந்தகா லத்து நிற்ற லப்பொருட் டன்மை யென்றான்.

அது கேட்ட சண்டகருமன் முனிவரை நோக்கி மொழிகின்றான்: "ஐய! கேட்டி, களவு செய்தவர்களை எமது அரசன் கட்டளையால் இரு பிளவாகச் செய்வது எனக்கு வழக்கம். அங்ஙனமே ஓர்கால் பெரியதோர் கள்ளனை உடம்பு முழுதும் வெட்டிப் பார்த்தும் ஒருவழியாலுஞ் சீவ னுண்டெனக் கண்ட தில்லை. மற்றொரு கள்வனை வதைசெய்யு முன்னும் வதைசெய்த பின்னும் நிறுத்துப் பார்த்தேன். உயிரோடிருந்த போதும் உயிர் நீங்கியபோதும் அவ்வுடம்பில் சிறிதும் வேற்றுமை தோற்றவில்லை. அன்றியும் மண்ணில் ஒரு குழிதோண்டி அதில் ஒருவனை உயிரோடுவிட்டு, சிறிதும் காற்றும் ஒளியும் நுழைய இடமில்லாமல் நன்றாக மூடிவைத்திருந்தும், மற்றவ னுயிர்போ யிட்ட வழி யொன்றுங் கண்டி லேனே" என்று இயம்பி நின்றனன்.

அகம்பனார் அருளிச்செய்கின்றார்: "விறகை யெங்கு வெட்டிப் பார்த்தாலும் அதிலுள்ள தீ காணப்படுவதில்லை. விறகொடு மற்றொரு விறகைத் தேய்க்க அதிலிருந்த தீ வெளிப்பட்டு அவ்விறகையும் எரித்து விடுகின்றது. உடம்பிலுள்ள உயிரின் தன்மையை இவ்வகைக் காணலாது மென்றுநீ யுணர வேண்டும். மேலும், காற்று நிரம்பிய ஓர் துருத்தியை முதலில் நிறுத்துவிட்டுப் பிறகு காற்று நீங்கியபின் நிறுத்துப்பார்த்தாலும் ஒரு தன்மைத்தாகவே யிருக்கும். காற்றும் நுழைய முடியாதபடி நன்றாக மூடிவைக்கப்பட்ட ஒரு நில மாளிகையிலிருந்து ஒருவன் ஊதும் சங்கின் ஓசை எவ்வழியாக வெளிவந்தது நீ நினைத்துப் பார். இவ்வகையே யாரும் உயிரின் இயல்பென்றுணர்க. இவ்வுயிர் தன்னியல்பு வேறுபட்டு வெய்ய தீவினைகளாலே வேறுவேறு துயரின்

ழுக்கி மையலுற்று, அழுந்தி நான்கு கதிகளினிடத்தும் பொருந்திச் செல்லும். அறிவு, காட்சி, ஒழுக்கம் இம் மூன்றுமுடைய பெரியோர் இதனை யறிவர்'' என்றனர்.

சண்டகருமன் அகம்பனரை நோக்கி, "அடிகேள்! நீவிர் அருளிச்செய்தது எமது மனத்தால் நினைத்தற்கும் அரியதாயுள்ளது; அது ஏகசித் தத்த ர்ய விறைவர்கட் கெளிது போலும்! ஐம்பொறிகளின் வழிச்சென்று இன்பநுகரும் மனமுடைய எம்போலியர்க்கு ஆகும் உறுதி யெதுவோ அதனை யருளிச்செய்யவேண்டும்'' என்று வேண்டினன்.

முனிவர் மொழிகின்றார்: நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் இவை மூன்றையும் பெரியோரிடம் நன்கு கேட்டுணர்ந்து அதன்படியே நன்னெறியில் நிற்பவர்களுக்கு, மேலான இன்பமும் உலகில் தலைமைத் தன்மையும் மற்றப்பேறும் கைவரும். பொருள்களின் நிலைமையை உற்றுணர்தலே நல்லறிவாகும்; அப்பொருள்களினுல் தூய்மையான அகத்தி லெழுந்த தெளிவே நற்காட்சியாம்;

பெருகிய கொலையும் பொய்யுங் களவொடு பிறன்ம னைக்கட்
டெரிவிலாச் செலவு சிந்தை பொருள்வயிற் றிருகு பற்றி
மருவிய மனத்து மீட்சி வதமிவை யைந்தோ டொன்றி
யொருவின புலைசு தேன்கள் ளொருவத லொழுக்க மென்றான்.

கொலையின்மை யொன்றே ஒருவனுக்கு உலகில் தலைமைத் தன்மையையும், அழியாத வாய்மையையும், அவன் வாய்மொழிக்கு நன்கு மதிப்பையும், அருளின் பெருமையையும், களவின் நீக்கத்தையும் உண்டு பண்ணும்; உலைதலில் பேருமை திட்ப முறுவலி யொழிந்த தீயும்; அறத்தின் வழியாற் செல்வமும், பொருளை யிறுகப்பிடித்தலின்மையும், ஒளியும், அழகும், வெற்றியும், நற்குடிப்பிறப்பும், இன்ப நுகர்ச்சியும் உண்டாகும். புலால், தேன், கள் இவற்றை நீக்குவதின் பயனும் மேற் கூறியதே யென்க. சிலைபயில் வயிரத் தோளாய்! இப்போது செப்பிய இப்பொருளை யெல்லாம் மகிழ்வோடு உள்ளத் துணர்ந்து கைக்கொள்க'' என்று கூற, சண்டகருமன் சாற்றுகின்றான்:

"கொலைத் தொழில் ஒன்று நீங்க அடிகள் அருளிய மற்றவற்றை யெல்லாம் அடியேன் கைக்கொள்ளுகின்றேன். ஏனெனில், கொல்லுதற் றொழிலே எனது வாழ்க்கையாதலின் அதனை நீக்கின் எனது வாழ்க்கையே அழியும்'' என்றான். அகம்பனர் பின்னும் அருள்கின்றார்:

"ஆருயிர் வருத்தங் கண்டா லருள்பெரி தொழுகு கண்ணால்
ஒருயிர் போல நெஞ்சத் துருகிநைந் தய்ய நிற்றல்''

அறத்திற்கெல்லாம் தலைமைபெற்றதாகும்; கழிந்த நாளெல்லாம் நீ உள்ளத்தில் இரக்கமின்றி உயிர்க்கொலைபுரிந்து தீவினையைப் பெருகச் செய்தனை; பிறந்த பிறவிகள்தோறும் நீ புரிந்த குற்றங்களனைத்தும் சிறந்தநல் லறத்தி னன்றித் தீருமா றுளது முண்டோ!

நிலையிலா வுடம்பின் வாழ்க்கை நெடிதுட னிறுவ லென்றிக்
கொலையினான் முயன்று வாழுங் கொற்றவ ரேனு முற்றச்
சிலபக லன்றி நின்றார் சிலரிவ ணில்லை கண்டாய்
அலைதரு பிறவி முந்நீ ரழுந்துவ ரனந்தங் காலம்.

ஐய! இன்னும் இதனை நீ கேளாய். யசோமதி யரசன் தந்தையாகிய யசோதர மன்னனும் அவன் தாயாகிய சந்திரமதி யென்பாளும் மாவினாற் கோழி செய்து அதனை வாளாற் கொன்ற கொடுமையால், கொடுந் துன்பங்கள் பின்னவர் பிறவி தோறும் பெற்றன பேசலாமோ! மிக்க வினைகளினாலே அஞ்சத்தக்க துன்பங்களையடைந்து விலங்குகதியிற் பன்முறையும் பிறந்திறந்து தளர்ந்து தீவினை மிகுதியால் இரண்டு கோழிகளாகப் பிறந்து இங்கு நின்னருகிலுள்ள கூட்டிலிருக்கின்றதைப் பார். மாவினாற் செய்த கோழிக்கு உயிரில்லையாயினும் உயிர்க்கொலை நினைப்பினாலே இவர்கள் பிறவிதோறும் வருந்திய வருத்தத்தைக் காணின், உயிர்ப் பொருளையே அருளின்றிக் கொல்பவர்கட்கு, செயிர்தரு நரகி னல்லாற் செல்லிட மில்லை யென்றான்.

அதுகேட்ட சண்டகருமன் மனங்கலங்கி வாடி, செற்றமும் சினமு நீக்கி, சின அறத்தெளிவில் பேராவக்கொண்டு, "அடிகேள்! முன்னம் உயிர்க்கொலை பலபுரிந்தேனாயினும் இப்போழ்து நீவிர் அருளிய வனைத்தையும் கைக்கொண்டு அடியேன் பெரும்பயன் பெற்றேன்" என்று வணங்கி விடைபெற்றுச் சென்றனன்.

இங்ஙனம் அகம்பனர் அருளிய மொழிகளைக் கேட்டலும் அங்குக் கூட்டினுளிருந்த கோழிகள் இரண்டும் தம் பிறப்புக்களனைத்தையும் உணர்ந்து மயக்கம் நீங்கி, "இவ் வடிகளால் இன்று அறவமுது உண்ணப்பெற்றோமாதலின் இனிப் பிறவி நோயினின்றும் பிழைத்தனம்" என்று களித்துக் கூவின. அவ் வொலி அப் பொழிலிலிருந்த யசோமதி யரசனது தூக்கத்தைக் கெடுத்ததால், அவன் சினந்து தனது வில்லில் சொல்லறிகணையைத் தொடுத்து விடுத்து அக் கோழிகளை மடித்தனன். அவைகள் அறப்பெருமையைக் கேட்ட நல்வினையால் இறப் பச்சமின்றித் தம்முடலை நீத்து, யசோமதி யரசன் மனைவியாகிய புட்பாவலியின் கருவினிற் சென்றன.

விரைசெறி பொழிலி னுள்ளால் வேனிலில் விளைந்த தெல்லாம்
அரசனு மமர்ந்து போகி யகநகர்க் கோயி லெய்தி
முரசொலி கழுமப் புக்கு மொய்ம்மலர்க் குழலி னோ
டுரைசெய லரிய வண்ண முவகையின் மூழ்கி னானே.

இன்னணம் யசோமதிவேந்தன் அரசச் செல்வத்திலிருக்கும் நாளில், அவன் மனைவி புட்பாவலி இரண்டு குழந்தைகளை யீன்றனள். அவர்களுள் ஆண் குழந்தைக்கு அபயருசி யென்றும், பெண் குழந்தைக்கு அபயமதி யென்றும் பெயரிடப்பட்டது. இவர்கள் இளம்பிறை யென்ன வளர்ந்துவரு நாளில், புட்பாவலி பின்னுமோர் ஆண் மகவைப் பெற்றனள். அவனுக்கு யசோதரன் என்று பெயரிட்டார்கள்.

பரிமிசைப் படைப யின்றும் பார்மிசைத் தேர்க டாயும்
வரிசையிற் கரிமேற் கொண்டும் வாட்டொழில் பயின்று மன்னர்க்
குரியவத் தொழில்க ளோடு கலைகளின் செலவை யோர்ந்தும்
அரசிளங் குமரன் சென்று னடுத்தது கூற லுற்றேன்.

நான்காவது சருக்கம் முற்றிற்று.

பத்திராதிபன்.

"பொருட்பெண்டிர்" என்னும் திருக்குறள் விளக்கம்.

(காலஞ்சென்ற பண்டிதர்
மாகறல் கார்த்திகேய முதலியார் எழுதியது.)

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று."

இதன் பொருள்.

கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையையுடைய முயக்கம் பிணமெடுப்பார் இருட்டறைக் கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினாற்போலும் எ-று.

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்துஞ் செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதானை முயங்குங்கால் அவர் குறிப்பு, கூலிக்குப் பிணமெடுப்பார் காணப்படாததோ ரிடத்தின்கண் இயைபில்லாததோர் பிணத்தை யெடுக்குங்கால் அவர் குறிப்போ டொக்குமெனவே, அகத்தா

லருவராயினும் பொருணோக்கிப் புறத்தாற் றழுவுவர்; அதனை யொழிக வென்பதாம் என்பது ப-ரை.

இருட்டறை - காணப்படாததோ ரிடமென்பர். அது பொருந்தாது.

அத் திருக்குறள், "உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண அண்ணாத்தல் செய்யா தளறு" என்பதேபோலத் தாப்பிசைப் பொருள்கோளாம்.

"இடைநிலை மொழியே யேனை யீரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை."

இருட்டறையிலென்னும் இடைநின்ற சொல், இருட்டறையிற் பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் என முன்னும், இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇயற்று எனப் பின்னும் சென்றியைதல் காண்க. இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇயற்று என்பது இல்பொரு ளுவமை. நின்முகம் களங்கமின்றித் தேய்வுபெறாததோர் மதிய மொக்குமென்பது போல. வடநூலார் அபூப வுவமை யென்பர்.

இருட்டறையிற் பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில் ஏதில் பிணமொன்றிருந்தால் அதனைத் தழுவிய தொக்குமென்பது.

அருவருப்பு முதலியன தோன்றாமைப் பொருட்டும் தம்மக்கள் தீயொழுக்கங்கள் கல்லாமைப் பொருட்டும் இருட்டறையில் முயங்கல் வேண்டும் என்பது அறநூற் றுணிபு.

பொதுமகளிர் பொருளையே விரும்புவது இயல்பாகலின், பல காரணம்பற்றி அவர்க்கு இருட்டறை யின்றியமையாதது. மருத்துவ நூலாரும், சுரத நூலாரும் ஒவ்வோர் காரணம்பற்றி இருட்டறையில் முயங்கற்க என்பர். அயனாட்டார் இவ்வொழுக்கம் கொள்வர்.

பொருட்பெண்டிர் சேரிப்பரத்தையருள் ஒருசாரார். அறவைப் பிணஞ்சுடுவோரும் அதனைத் தழுவிற்றிலர். ஆசந்தியில் வைத்தலும் ஆசந்தியைச் சுமத்தலும் தழுவுதலாகாது.

இவ் வாராய்ச்சியால் பரிமேலழகர் உரை தவறுபட்டது காண்க.

இன்னும் அத் திருக்குறளைப்பற்றிச் செந்தமிழ் தொகுதி ௪-ல் பகுதி ௧ - ௧௦-ல் காண்க.

இலக்கணப் பகுதி.

* பிரயோக இலக்கணம்.

(வெண்டாமரை ௪, இதழ் அ – கூ, 197-ம் பக்கத் தொடர்ச்சி.)

உ.

அ. பலம், வலி, ஆற்றல்.

பலம், வலி என்னும் இரண்டு பதங்களும் ஒரு மாதிரியான ஜட சத்துவத்தைக் குறிக்கும். எவ்வளவு கனமான ஜடப்பொருளை ஒரு மனிதன், அல்லது ஒரு பிராணி, அல்லது ஒரு யந்திரம், கயிறுபோன்ற பொருள், அசைக்க அல்லது தாங்க அல்லது தூக்கமுடியுமோ, அந்தக் கனந்தான் அந்த மனிதன், பிராணி முதலியவைகளின் பலம் அல்லது வலிக்கு அளவு.

ஆற்றல் என்பது தாங்கும் சக்தி. ஆனால் அது நெடுங்காலமாக மனோதிடத்தைத்தான் குறித்து வருகிறது. ஆற்றலுக்குச் சரீர பலம் அனாவசியம். நல்ல பலவான்களான பையன்களையும் ஆட்களையும் சிறிய பையன்கள் அஞ்சாமல் எதிர்த்துச் சண்டை செய்வதை நாம் ஒவ்வொருவரும் பலதடவைகளில் பார்த்திருக்கிறோம். இந்த மாதிரிச் சண்டைகளில் சிறுபையன்களிடம் தெரியும் குணம் ஆற்றல் ஆகும்.

பலவான்களில் தாரதம்மியம் உண்டு: அதாவது, எப்பேர்ப்பட்ட பலவானுக்கும் அவனைவிட அதிக பலம்வாய்ந்த போட்டிக்காரன் அல்லது சத்துரு இருப்பான். ஆனால் பரிபூரணமான மனோதிடம் உள்ளவனைத்தான் ஆற்றல் படைத்தவன் என்று சொல்லலாமானதால் ஆற்றலையுடைய மனிதர் இருவரில் இவன் அதிகமான ஆற்றல் உடையவன், இவன் குறைந்த ஆற்றல் உடையவன் என்று தாரதம்மியம் கூறொணாது.

ஆனால் செய்யுளில் இந்த வித்தியாசம் பாராட்டாமை,

ஆயிரம் ஆயிரம் களிற்றின் ஆற்றலர்

என்ற கம்பராமாயணம் கரன்வதைப்படலம், ௩௭-வது பாட்டிலுள்ள பிரயோகத்தால் அறிக.

---

* சென்ற சஞ்சிகையிலிருந்து தொடர்ச்சியாகவரும் இந்த நூலை மறுபடியும் பிரசுரிக்கும் பாத்தியம் இந்த நூலின் ஆசிரியனுக்குச் சொந்தமானது.

பலம் விருத்தியாவதற்குச் சரீரத்தின் தசைகளை வியாயாமங்களால் (அதாவது தேகப்பயிற்சி மார்க்கங்களால்) உரமானவையாகச் செய்துகொள்ளவேண்டும். ஆற்றலை வளர்த்துக்கொள்ளவேண்டுமானால், மனதையும் புத்தியையும் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்; துன்பத்தையும் நோயையும் லக்ஷியம் செய்யாமலிருக்கக் கொஞ்சம் கொஞ்சமாகப் பழகவேண்டும்; பயத்தை மனதிலிருந்து களைந்துவிடவேண்டும்; நம்மால் முடியாத காரியம் திரிலோகத்திலும் இல்லை என்கிற எண்ணத்தை அடிக்கடி சிந்தனைசெய்து தீரகுணத்தைத் தன் சுபாவமாக்கிக்கொண்டு விடவேண்டும்.

உலகம் பலமுடையவன் வசத்ததல்ல, ஆற்றலுடையவன் வசத்ததே. ஆற்றலில்லாதவன் பலவானாயிருந்தாலுங்கூடத் தனக்காகிலும் பிறர்க்காகிலும் காலத்தில் பயன்படான். ஆற்றலில்லாதவன் ஆண்பிள்ளையல்ல.

௧. தீரம், தைரியம்.

சொல்மூலம் ஆராயும்போது தீரத்தின் உடைமைதான் தைரியமானாலும், பிரயோகத்தில் இரண்டுக்கும் நிரம்பப் பேதமுண்டு.

தீரம் என்பதற்கு ஆற்றல்தான் பொருள். அது அறிவின் நிலைப்பேற்றினால் மனிதன் அகத்தில் எப்பொழுதும் மாறாமலிருக்கும் கலங்காமை. தைரியம் என்பது பயமின்மை: மனிதராலும், மிருகங்கள் முதலிய பிரகிருதி உலகத்தினின்றும் வரக்கூடிய துன்பங்கள், கஷ்டநிஷ்டூரங்கள் முதலியவைவையைத் தாங்கி அவைகளுக்கு ஈடுகொடுத்து முன்னேற முயலுவிப்பது அதுவே. அற்ப விஷயங்களைப்பற்றிப் பேசும்போதும் தைரியம் என்னும் பதத்தைப் பிரயோகிக்கலாம். ஆனால் தீரம் என்பது பெரும்பான்மையும் பெரிய விஷயங்களைப்பற்றிப் பேசும்போதுதான் உபயோகிக்கத்தக்கதாகும். தவிர, தீரமானது பெருந்தோரணையான சாமர்த்தியத்தையும் குறிக்கும். அறிவு உலகத்திலும் ஆத்ம உலகத்திலும் அறிவினால் ஆழமான மறைப்பொருள்களை ஆராய்பவர்களையும் தீரர்களென்று சொல்லுவது வேத மரபு.

எதிர்பாராத நஷ்டங்கள் வந்து வியாபார முதல் முழுகிப்போய் விட்டாலும், நல்ல வைசியன் தைரியத்தைக் கைவிடாமல் மறுபடியும் முயன்று தன் வியாபாரத்தை நிலைநாட்டிவிடுவான். குழந்தைகளை இருட்டில் பயப்படாமல் தைரியமாகப் போகவும், ஜனங்களிடத்தில் தைரியமாகப் பேசவும் பழக்கவேண்டியது தாய்தந்தையரின் முக்கியமான கடமைகளில் ஒன்று.

போரில் ஒரு சைன்னியத்துக்கு வெற்றியைத் தருவது படைத் தலைவர்களின் தீரமும் படைவீரர்களின் தீரமும் தானே ஒழிய, சைன்னியத்தின் தொகை அல்ல. நியாய ஸ்தலத்திலும் மந்திர சபையிலும் அவையத்தாரின் அபிப்பிராயம் தனக்கு விரோதமாக இருக்கையிலும், அவையத்தார் தன்பேரில் குரோதத்தோடு இருக்கையிலும், தனக்கு நியாயம் என்று தோன்றுகிற விஷயத்தைக் கலங்காமல் பேசி அவர்கள் மனதைத் திருப்ப முயலுவதற்குப் பெரிய தீரம் வேண்டும். அளவிறந்த தீரம் இருந்திடாவிடில் தேமோஸ்தனன், சாதாம், மிராபோ, தாந்தோன், ஸ்வாமி விவேகாநந்தர் — இவர்களுக்கெல்லாம் இப்பொழுது நிலைபெற்றிருக்கும் மகா வாக்மிகள் என்னும் கீர்த்தி கிடைத்திராது.

௪௦. திடம், வலிமை.

திடம் என்பதற்கு வலிமைதான் பொருள். ஆனால் வலிமை என்னும் பதத்தை மனிதன், மிருகம், ஜடப்பொருள் முதலிய எல்லாவற்றின் விஷயத்திலும் உபயோகிக்கலாகும். திடம் என்னும் வார்த்தையையோ மனிதன் ஒருவன் விஷயத்தில்தான் உபயோகிக்கலாம்.

தவிர எல்லா வலிமையும் திடமல்ல. நோயில்லாமலிருக்கும் சகஜமான சௌக்கியமான நிலைமையைத்தான் திடம் என்கிறோம். பழைய இலக்கியத்தில்,

"மல்லுயர் தோளினன் வலியனே?" என்றன்

என்னும் கவியில்போல வலிமை என்பதற்கும் இந்தப் பொருள் வரும். ஆனால் தற்கால வசன வழக்கில் இது மரபல்ல.

மனோபலத்திற்கும் திடம் என்று சொல்லுவதுண்டு.

மனிதன் கையினால் அழுத்தமாகச் செய்யப்பட்ட நகை முதலிய பொருள்களைப்பற்றிப் பேசும்போது பேச்சு வழக்கில் திடமான கட்டடம், திடமான வேலை என்றபடி சொல்லுவதுண்டு.

சாதாரணமான லௌகிக காரியங்களில் காட்டப்படும் கலங்காமையை ஆற்றல், தீரம் என்று சொல்லுதல் தகாது. அதைத் திடம் என்று சொல்லுவதுதான் வழக்கம்.

நமது பாட்டன்மார் என்பது தொண்ணூறு வயதுவரையில் திடகாத்திரர்களாயிருந்ததற்கும் இருப்பதற்கும் காரணம், அவர்கள் சரீரத்துக்கு நல்ல பயிற்சியும் நல்ல காற்றும் கொடுத்து, மிதபோஜனிகளாகவும், மிதபோகிகளாகவும், சுத்தமான வாழ்க்கையுள்ளவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்பதே. நம் காலத்து மனிதர் நாற்பது ஐம்பது பிரா

யத்துக்குள் திடமிழந்து, கிழவர்களாகி, அற்பாயுளாக மரிப்பதற்குக் காரணம், இவர்கள் சுகாதார விதிகளைக் கவனிக்காமல், காப்பி, தேயிலை, புகையிலை முதலிய விஷ பதார்த்தங்களை உபயோகிப்பதும், அமித போஜனிகளாகவும், அமிதபோகிகளாகவும் இருப்பதும், வியாயாமத்தை அசட்டைசெய்து நல்ல காற்றை அனுபவியாதிருப்பதுமே.

உலகத்தில் பெரிய காரியங்களைச்செய்து முடிக்கவேண்டுமானல் மனிதனுக்குத் திட சித்தமும் திட விரதமும் அத்தியாவசியம்.

கக. வீரியம், சௌரியம், பராக்கிரமம்.

ஆண்மை, புருஷத்தன்மை, பௌருஷம் என்பது வீரியமாகும். சூரனது செய்கை சௌரியமாகும். போரில் வலிமை மிகுந்த வீரர்களை வென்று, சாதாரண மனிதர் அசாத்தியம் என நினைக்கும் சௌரியத்தை ஒருவன் காட்டினுல் அது பராக்கிரமமாகும்.

வீரியம் என்பது மனிதனுடைய மனித சக்தி. ஆனுல் அந்த வார்த்தையைப் பதார்த்தங்களின் சக்திக்கும் ஏற்றிச் சொல்லலாம். சௌரியம் என்பதைப் பொருள்களின்பேரில் ஏற்றிச்சொல்லமுடியாது. வீரியம் என்பது ஓர் தன்மை, ஓர் சக்தியாகும். அந்தச் சக்தி அதை உடையவனிடம் அவ்வியக்தமாக இருந்தாலும்கூட, அதாவது, அதைக் காட்டவேண்டிய சந்தர்ப்பம் நேராததால் அவனுல் அந்தச் சக்தி எப்பொழுதும் காட்டப்படாமலிருந்தாலும்கூட, அது அவனிடத்தில் எப்பொழுதும் உளதாகவே கொள்ளத்தக்கது. ஆனுல் போரில் சூரச் செயல்கள் ஏற்கெனவே செய்திருப்பவனையும், தற்பொழுது செய்து கொண் டிருப்பவனையும்தான் சௌரியவான் என்னலாம். போரில் விகஸிக்கும் வீரியம்தான் சௌரியம்.

காரியம் பெரிதா, வீரியம் பெரிதா? என்று சொல்லிக்கொண்டு, மானவமானத்தைக் கவனியாதுகூடக் காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என்று பெரும்பாலார் நினைக்கிருர்கள். ஆனுல் காரியம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிது வீரியம். சிலவேளைகளில் காரியத்தை விட்டுவிட்டுக்கூட வீரியத்தைக் காட்டவேண்டும். ஒருவனுடைய சத்துரு அவன்மீது இரக்கம்வைத்து, பிச்சையிடுவதுபோலச் சில உபகாரங்கள் செய்யவந்தால் ஆண்மையுள்ளவன் காரியம்தான் பெரிது என்று அவைகளை ஏற்றுக்கொள்ளமாட்டான்.

போர்ச்சேவகர்தான் சௌரியமும் பராக்கிரமமும் காட்டமுடியும். ஆனுல் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு ஸ்திரீயும் ஒவ்வொரு நிமிஷத்திலும் வீர வாழ்க்கை வாழலாம். வீரியத்தை விரும்பாத ஜன்மம் வீண்.

சாப்பாட்டில் அகத்திக்கீரையும் பாகற்காயும் சேர்ந்தால் நோயாளி சாப்பிடும் மருந்தின் வீரியம் மிகக் குறைந்துபோய்விடுகிறது.

கஉ. வீரன், சூரன்.

போரிலே அசாதாரணமான பலமும் திறமையும் மனோதிடமும் காட்டிச் சேவகம் செய்கிறவனைச் சூரன் என்கிறோம். இதுதான் இந்தப் பதத்திற்கு மூலப்பொருள். போரில்லாத மற்ற இகல் (போட்டி) களிலும் அஞ்சாமையும் திறமையும் காட்டுகிறவனையும் ஔபசாரியமாகச் சூரன் என்று சொல்லுவது வழக்கமாக இருக்கிறது.

வீரனுடைய இயற்கையில் மனோபலம்தான் மூலாதார குணம். வீரன் என்னும் பெயருக்கு ஒருவன் அருகமாவதற்கு, சரீர சம்பந்தமான அபாயங்களுக்கு அஞ்சாதிருப்பது மாத்திரம் போதாது. தளர்ச்சி, சிறுமை, அயலாருடைய நன்மதிப்பு கிடைக்காமற் போய்விடப்போகிறதே என்று அஞ்சி, தான் சத்தியம், தர்மம் என்று நினைக்கிறதை வெளியிடாது அடக்கிவைத்துக்கொண்டிருக்கும் இழிகுணம் ஆகிய இவை வீரனிடத்தில் இறைகூட இரா.

சூரன் என்ற மொழியினுள்ளேயே போர் என்னும் பொருள் தொனிப்பதால் போர்ச்சூரன் என்று சொல்லுவது தவறு. ஆனால் போர்வீரன் என்று சொல்லலாம்: ஏனெனில், பலவிதமான வீரகுணங்களில் சாத்தன் போருக்கு உரித்தான வீரகுணத்தை மாத்திரம் காட்டினவனாகலாம்.

ஜாதி போர்புரியுங்காலத்தில்தான் நாட்டில் சூரர்கள் தேவை. ஆனால் சர்வகாலத்திலும் வீர புருஷர்கள் — அதாவது தர்ம வீரர்கள், சாஸ்திர வீரர்கள், வித்தியா வீரர்கள், பரோபகார வீரர்கள் முதலியவர்கள் — எல்லா நாடுகளிலும் தேவையே. வீர புருஷர்கள்தான் ஓர் ஜாதிக்கு உள்வைரமாகிறார்கள். எல்லோரும் சூரர்களாயிருக்கமுடியாது; ஆனால் ஒருவர்விடாமல் எல்லோரும் ஏதாவது ஓர்வழியில் தங்கள் வீர குணத்தைக் காண்பிக்கலாம் — எப்பொழுதும் வீர வாழ்க்கை, அதாவது பெரிய செயல்கள் நிறைந்த, நிர்ப்பயமான, நேர்மையான, உழைப்பு நிரம்பிய வாழ்க்கை வாழலாம்.

கக. சக்தி, சாமர்த்தியம், திறமை.

ஒவ்வொரு மனிதனும் சில சக்திகளோடு பிறக்கிறான். கல்வியினாலும், உழைப்பினாலும், கர்ம பரிபாகத்தினாலும் சில சக்திகள் மனிதனிடம் இடையில் வந்தும் தோன்றுகின்றன. ஆனால் சாமர்த்தியமும்

திறமையும் மனிதர்களுக்குக் கல்வியினாலும் சகவாசத்தாலும் அப்பியாசத்தினாலும்தான் வருகின்றன. சாமர்த்தியமும் திறமையும் அவயவங்களையும் மனத்தையும் புத்தியையும்தான் சார்ந்திருக்கின்றன.: சக்தியின் ஆதாரம் இன்னும் ஆழமானது. சக்தியின் மூலத்தைத் தேடும்போது ஆத்மாவரையில் போகவேண்டியிருக்கும்.

ஒரு மனிதனுடைய அல்லது ஒரு பொருளுடைய் சத்துவம் அனைத்துக்குமே சக்தி என்று சொல்லிவிடலாம். ஆனால் பொருள்களைப்பற்றிப் பேசும்போது சாமர்த்தியம், திறமை என்னும் பதங்களைப் பிரயோகிக்கக்கூடாது. சாமர்த்தியமும் திறமையும் மனிதனுடைய குணங்களே.

ஆத்ம சக்தி நிறைந்தவர்கள் சாதாரண ஜனங்களை வசியப்படுத்தித் தம்மிஷ்டப்படி நடக்கும்படி செய்வார்கள். சாமர்த்தியசாலிகள் தங்கள் காரியத்தை நயமாகச் சாதித்துக்கொண்டு விடுகிறார்கள்.

சாப்பாடில்லாமல் கஷ்டப்படும் கல்விமான்கள் எண்ணிறந்தபேர் இருப்பார்கள்: ஆனால் நன்றாக ஆளப்படும் தேசத்தில் உலகத்தார் வேண்டும் ஏதாவது ஒரு தொழிலில் திறமையுடையவன் எக்காலத்திலும் பட்டினியாகப் படுக்கமாட்டான்.

கச. பழக்கம், வழக்கம்.

ஒரு மனிதனோடு, அல்லது ஒரு தொழிலில், நெடுநாள் பழகிவருவதிலிருந்து பழக்கம் ஏற்படுகிறது. ஒரே காரியத்தை அநேக தடவைகள் செய்துவந்தால் அந்தக் காரியம் செய்வது வழக்கமாகிவிடுகிறது.

மனிதன் துஷ்டர்களோடு பழகினால் தானும் துஷ்டனாகி விடுகிறான்.

காப்பி, தேயிலை, புகையிலை, அபினி, கஞ்சா, கள், சாராயம் முதலிய விஷ பதார்த்தங்களை உபயோகிப்பது ஒருவனுக்கு வழக்கமாகிவிட்டால், அவைகளால் வரும் கோரமான நோய்களை அனுபவிக்கையில் கூட அவனுக்கு அந்த வழக்கத்தை விடுவது அநேகமாய் அசாத்தியமாகிவிடுகிறது.

ஒரு தொழிலில் தேர்ச்சியடையவேண்டுமானால் இடைவிடாது அந்தத் தொழிலைப் பழகிவரவேண்டும். சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.

எல்லா வழக்கமும் மனிதனை அடிமைப்படுத்திவிடுகிறது. ஆகையால் மனிதன் தனக்குத் தீய வழக்கங்கள் படியாதிருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

தோட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும் என்கிறார்கள். ஆனால் ஜனங்கள் இந்தப் பழமொழியை வழக்கத்தைக் குறிக்கிறதற்குத்தான் தவறாக உபயோகிக்கிறார்கள்.

(வரும்.)

வ. வே. ஸு. ப்ரம்ஹண்ய அய்யர்.

சாத்திரப் பகுதி.

சந்நியாச விஷயம்.

பரம கருணாநிதியாகிய பரமேசுவரனால் வெளியிடப்பட்ட சுருதியின்கண், அரிய மனிதப் பிறப்பை யடைந்துள்ள ஜீவர்களின் இதத்தின் பொருட்டுப் பிரதிபாதித்துள்ள பிரமசரியம், கார்ஹஸ்தியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் ஆச்சிரமம் நான்கனுள் சந்நியாச ஆச்சிரமமானது மிகச் சிறந்ததென்பது உலகில் பிரசித்தமாம்.

“துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.”

என்றது அமிழ்தினுமினிய தமிழ்த் திருமறையும்.

அத்தகைய சந்நியாசமானது சுருதி, மிருதியாகிய சாஸ்திரங்களால் அதிகாரியைக் குறித்துச் செய்யத்தக்கதென்று விதிக்கப்பட்ட அக்னி கோத்திரம், சந்தியோபாசனை முதலிய கருமங்களை விதிப்படி விடுவதாகும்.

அக்கரும சந்நியாசத்தின் விதியானது ஆன்மபுராணம் பதினோராவது அத்தியாயத்தின்கண் மிக விரிவாய்க் கூறப்பட்டுளது.

மேற்கூறிய சந்நியாச இலக்கணத்தில் “விதிக்கப்பட்ட கருமங்கள்” எனக் கூறாமல் “கருமங்கள்” என மாத்திரம் கூறின், விலக்குக் கருமங்களையும், விதிக்கப்படாத கருமங்களையும் விட்டிருக்கும் பற்றுள்ளோரும் சந்நியாசிகளெனப்படுவர். ஆகலின் “விதிக்கப்பட்ட கருமங்களை” எனக் கூறல் அவசியமாயிற்று. “விதிப்படி விடுவது” எனக் கூறாமல் “விடுவது” என்பது மாத்திரம் கூறப்படின் சோம்பல் முதலிய குற்றங்களால் கருமங்களை விட்டிருக்கும் தோஷிகளையும் சந்நியாசிக

ளனல் வேண்டும். ஆகலின் "விதிப்படி விடுவது" எனக் கூறப் பட்டது.

இத்தகைய சந்நியாசமானது வைராக்கியமின்றிச் சாத்திய மாகாது. அதாவது வைராக்கியமுடையவனே சந்நியாசம் பெறுதற்கு அதிகாரியாவான்.

வைராக்கியமும் அபரம், பரம் என இருவகைப்படும். அபர வைராக்கியமும் யதமானம், வியதிரேகம், ஏகேந்திரியம், வசீகாரம் என நான்கு வகைப்படும்.

இச் சம்சாரத்தின்கண் இது சாரம் இது அசாரம் எனச் சார வசாரங்களின் விவேகம் யதமானமாம். இராகாதி தோஷங்கள் சித்தத் தின்கண் இத்துணை விலகியதென விவேகித்தறிந்து எஞ்சிய தோஷங் களை விலக்க முயலுதல் வியதிரேக வைராக்கியமாகும். மனதினிடத்து விஷயேச்சை யிருக்கினும் இந்திரியங்களை விஷயங்களில் செல்ல வொட்டாது தடுத்தல் ஏகேந்திரியமாம். இகபரலோக விஷயங்கள் அழிதன் மாலையவென வுணர்ந்து அவற்றைவிடும் விருப்பம் வசீகாரம் என்னும் பெயரிய வைராக்கியமாகும். "பார்ப்பதும் கேட்பதுமான பொருள்களிடத்து அவாவற்றிருத்தலே வசீகாரம்" எனப் பதஞ்சலி யாரும் கூறினர்.

இவ் வசீகார வைராக்கியம் மந்தம், தீவிரம், தீவிரதரம் என மூவகையாம்.

புத்திரன், ஸ்திரீ, தனம் முதலிய பிரிய வஸ்துக்கள் பிரியும் போது "இக் குடும்பம் கொடியது" என்னும் புத்தியால் அப்போது மட்டும் அவைகளை யுவர்த்துவரும் தியாகேச்சை (விடுகையில் விருப்பம்) மந்தமாம்.

"இச் சரீரமுள்ளளவும் புத்திரதார தனதிகள் நமக்கு வேண்டா" என்னும் ஸ்திர புத்தியால் அவைகளை வெறுத்துவரப்பட்ட தியாகேச்சை தீவிர வைராக்கியமாம்.

"மீண்டும் வருதலையுடைய பிரமலோகம் வரையிலுமுள்ள எல்லா வுலகங்களும் மித்தை; ஆகலின் நமக்கு வேண்டா" என்னும் ஸ்திர புத்தியால் அவைகளை வெறுத்துவரும் தியாகேச்சை தீவிரதர வைராக்கிய மாம்.

மந்த வைராக்கியமுடையவனுக்கு யாதொரு சந்நியாசத்திலும் அதிகாரமில்லை.

தீவிர வைராக்கியமுடையவனுக்குக் குடீசகம் பகூதகம் என்னும் இரண்டு சந்நியாசங்களினிடத்தும் அதிகாரங்கூடும்.

தீவிர வைராக்கியமுடைய எந்தப் புருடனது சரீரம் தீர்த்த யாத்திரை செய்யச் சக்தியில்லாததாமோ அப் புருடன் குடீசக சந்நியாசத்தின்கண் அதிகாரியாம். எவனது சரீரம் சக்தியுடையதாமோ அவன் பகூதக சந்நியாசத்தின்கண் அதிகாரியாவன்.

குடீசகன், பகூதகன், ஹம்ஸன், பரமஹம்ஸன் எனச் சந்நியாசிகள் நால்வகையினர் என்றும், இவர்களில் சந்நியாச தர்மங்களை முற்றும் அநுஷ்டிப்பவனாகித் தன் புத்திரனால் செய்விக்கப்பட்ட ஒரு குடிசையில் வசித்துப் புத்திரனிடத்திலேயே பிக்ஷை வாங்கிப் புசிப்பவன் குடீசகனென்றும், பந்து புத்திரர் முதலியவர்களைவிட்டுச் சந்நியாசதர்மங்களையனுஷ்டிப்பவனாகி ஏழு கிருகங்களில் பிக்ஷையேந்திப் புசிப்பவன் பகூதகனென்றும், தண்டம், கமண்டலம் முதலியவைகளைத் தரித்துக்கொண்டு கிராமத்தின் சமீபத்துள்ள குளக்கரையில் ஒரு ராத்திரியும், பட்டணத்தில் ஐந்திரவும் வாசஞ்செய்து, மூன்று, ஆறு, பதினைந்து, முப்பது நாட்கள் உபவாசமிருந்து கிருச்சிரம், சாந்தபனம் முதலிய விரதங்களால் உலர்ந்த தேகத்தைத் தரிப்பவன் ஹம்ஸன் என்றும், குஹ்யஸ்தானத்தை மறைப்பதாகிய வஸ்திரம், குளிரைப் போக்குவதாகிய கந்தை, ஜபமாலை, ஒற்றைத்தண்டம் இவைகளைத் தரித்து, ஒரே பிக்ஷையெடுத்துக்கொண்டு திரிதண்டம், சிகை, யக்யோபவீதம், சந்தியாவந்தனம் இவைகளையொழித்தவன் பரமஹம்ஸனென்றும், ஜடபாரதர், தத்தாத்திரேயர் முதலியோர்களைப்போல உன்மத்தர்களாய் நடித்துக்கொண்டிருந்தவர்கள் பரமஹம்ஸர்கள் என்றும் மனு, பராசராதி அறநூல்கள் கூறுகின்றன.

தீவிரதர வைராக்கியமுடையவன் ஹம்ஸ சந்நியாசத்தின்கண் அதிகாரியாம்.

சத்துவம், இராஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களின் பரிணாமரூப இவ்வுலக பரலோக விஷயங்களனைத்தினும் அவாவற்றிருத்தல் பர வைராக்கியமாம். இத்தகைய பர வைராக்கியமுடையவனே பரமஹம்ஸ சந்நியாசத்தின்கண் அதிகாரியாம்.

அப் பரமஹம்ஸ சந்நியாசமும் விவிதிஷா சந்நியாசம், வித்வத் சந்நியாசம் என இருவகைப்படும். விவேகாதி நான்கு சாதனங்கள் நிறைந்தவன் தத்வ ஞானமடையும் பொருட்டுக்கொள்ளும் சந்நியாசம் விவிதிஷா சந்நியாசமாம்.

இவ் விவிதிஷா சந்நியாசமும் இருவகையாம். பிறப்பிற் கேது வாகிய கருமங்களின் தியாகரூபம் ஒன்று. பிரைஷ மந்திரோச்சாரண பூர்வகமாகத் தண்டதாரணாதி ஆச்சிரம வடிவம் பிறிதொன்றும்.

காமிய கருமங்களும், பலேச்சை பூர்வகமாகச் செய்யும் நித்திய கருமங்களும் பிறப்பிற் கேதுவாகின்றன வாகலின் அவற்றின் தியாகம் முதல் விவிதிஷா சந்நியாசமாம். அதன்கண்ணும் காமிய கருமங்களை முற்றும் விடுதலும், நித்திய கருமங்களை முற்றும் விடாமல் அவற்றின் பலேச்சையை மாத்திரம் விடுதலும் கருத்தாம்.

யாதாயினுமோர் பிரபல நிமித்தத்தின் வசத்தால் தண்டதாரணாதி ரூப சந்நியாச வாச்சிரமத்தைக் கொள்ளப் பிரதிபந்தமுடையோரான விரக்த இல்லறத்தாருக்கு இந்த முதல் விவிதிஷா சந்நியாசத்தின்கண் அதிகாரங்கூடும்.

சுருதி, மிருதி, இதிகாசம், புராணங்களில் ஜனகர், யாக்ஞவல்கியர், அஜாதசத்ரு, கஹோலர், மைத்திரேயி, கார்க்கி முதலியோருக்கும் பிரம்ஹ சாக்ஷாத்காரத்தின் பிராப்தி கூறப்பட்டிருக்கிறது. அவர்களனைவருக்கும் மேற்கூறிய விவிதிஷா சந்நியாசத்தினாலேயே பிரம்ஹ சாக்ஷாத்கார முண்டாயிற்று.

இதிலிங்ஙனம் ஆசங்கை யுண்டாகின்றது.

(வரும்.)

இதோபதேசி.

ஏஜண்டுகள் தேவை.

கலைமகள் பத்திரிகைக்கு நூறு சந்தாதாரர்களைச் சேர்க்கும் ஏஜண்டுகளுக்கு ரூபா பத்து கமிஷன் கொடுக்கப்படும். அங்ஙனம் சேர்க்கப்படும் சந்தாதாரர்கள் தமது சந்தாவை முற்பணமாக பத்திராதிபருக்கே நேராக அனுப்பிவிடவேண்டும்.

ப-ர்.